செ.வெ.எண்: 03 நாள்:02.03.2020

## கோயம்புத்தூர் மாவட்டம்

## நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குசாவடி பட்டியல் வெளியிட்டது தொடர்பாக அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குசாவடி பட்டியல் வெளியிட்டது தொடர்பாக அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனை கூட்டம் இன்று(02.03.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகராட்சி துணை ஆணையாளர் திரு.பிரசன்னாஇராமசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.முத்துகருப்பன் மற்றும் அசரயில் கட்சி பிரமுகர் பலர் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வரைவு வாக்குசாவடி பட்டியல் 26.02.2020 அன்று வெளியிடப்பட்டது. இப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் திருத்தப்பட்ட வாக்குச்சாவடி பட்டியல் 05.03.2020 அன்று வெளியிடப்படும். நிறைவு செய்யப்பட்ட வாக்குச்சாவடி பட்டியல் அச்சிட்டு முடித்து விநியோகம் செய்யும் பணி முடிவுற்றப்பிறகு, வாக்காளர் பட்டியல் தயார் செய்யும் பணி நடைபெறும். 20.03.2020 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 100 வார்டுகளில் 1245 வாக்குச்சாவடிகளும், 744147 ஆண் வாக்காளர்களும், 740813 பெண் வாக்காளர்களும், 203 இதரர்களும் என மொத்தம் 1485163 வாக்காளர்களும், பொள்ளாச்சி நகராட்சியில் 36 வார்டுகளில் 82 வாக்குச்சாவடிகளும், 39007

ஆண் வாக்காளர்களும், 41318 பெண் வாக்காளர்களும், 15 இதரர் என மொத்தம் 80340 வாக்காளர்களும், வால்பாறை நகராட்சியில் 21 வார்டுகளில், 84 வாக்குச்சாவடிகளும், 28426 ஆண் வாக்காளர்களும், 29224 பெண் வாக்காளர்களும், 3 இதரர்களும், என மொத்தம் 57653 வாக்காளர்களும், மேட்டுப்பாளையம் நகராட்சியில் 33 வார்டுகளில், 62 வாக்குச்சாவடிகளும், 28422 வாக்காளர்களும், 30159 பெண் வாக்காளர்களும், 5 இதரர்களும், மொத்தம் 58586 வாக்காளர்களும், 37 பேரூராட்சிகளில் உள்ள 585 வார்டுகளில், 718 வாக்குச்சாவடிகளும், 280510 ஆண் வாக்காளர்களும், 292984 பெண் வாக்காளர்களும் 77 இதரர்களும் மொத்தம் 573571 வாக்காளர்களும் உள்ளனர்.

கோயம்புத்தூர் மாவட்ட நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் 775 வார்டுகளில் 2191 வாக்குச்சாவடிகளும், 1120512 ஆண் வாக்காளர்களும், 1134498 பெண் வாக்காளர்களும் 303 இதரர்களும் என மொத்தம் 22,55313 வாக்காளர்கள் உள்ளனர். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**